ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# உரைகளும் உரையாசிரியர்களும்

**முனைவர் ஏ. கோதண்டராமன்**
இணைப்பேராசிரியர் - தமிழ்த்துறை
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி (சுழற்சி – 2)
மீனம்பாக்கம், சென்னை - 600 061

**ஆய்வுச்சுருக்கம்**

*இலக்கியம், இலக்கணம், உரை என்பது ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அவை, ஒன்றில்லாது இன்னொன்று இயங்கா எனும் நிலையில்; பத்திலிருந்து பதினோராம் நூற்றாண்டு காலங்களில் உரைகளின் காலம் எனச் சுட்டப்படுகிறது. இவ்வாராய்ச்சியின் பயனாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய சங்க இலக்கியம் மற்றும் தொல்காப்பிய உரைகள் தமிழ் இலக்கிய வரலாற்றின் பல்வேறுபட்ட பரிமாணங்களைத் தோற்றுவித்துத் தனித்து நின்றன எனலாம்.*

**கருச்சொற்கள்**

*உரை:விளக்கம் - உரைகளின் பணி - உரை வகைகள் - களவியலுரை - இளம்பூரணர் - யாப்பருங்கல விருத்தி - பேராசிரியர் - சேனாவரையர் - நன்னூல் உரைகள் - சிலம்பின் உரைகள் - திருக்குறளின் உரைகள் - நச்சினார்க்கினியர் - சமய இலக்கியவுரைகள் - ஈட்டு உரைகள் - கம்பன் - சைவத்தத்துவம் - 20இல் உரைகள் - உரைகளும் திறனாய்வும் - உரையும் உரைநடையும்.*

## முன்னுரை

*திறனாய்வுலகில் தலைசிறந்து விளங்கிய ஆய்வறிஞர் தி. சு. நடராசன் அவர்கள் உரைகள், உரையாசிரியர்கள் தொடர்பான பல்வேறு சிந்தனைகளைத் தாங்கியதாக,* ***"உரைகளும் உரையாசிரியர்களும்"*** *என்ற ஆராய்ச்சி நூலை வெளியிட்டுள்ளார். இவ்வாய்வு நூலில், உரை: விளக்கம், உரைகளின் பணி, உரை வகைகள், களவியலுரை, இளம்பூரணர், யாப்பருங்கல விருத்தி, பேராசிரியர், சேனாவரையர், நன்னூல் உரைகள், சிலம்பின் உரைகள், திருக்குறளின் உரைகள், நச்சினார்க்கினியர், சமய இலக்கியவுரைகள், ஈட்டு உரைகள், கம்பன், சைவத் தத்துவம், 20 ல் உரைகள், உரைகளும் திறனாய்வும், உரையும் உரைநடையும் போன்ற பல்வேறு களங்களில் ஆய்வு நிகழ்த்தியதை ஒட்டியே இக்கட்டுரை அமைகிறது.*

## உரை: விளக்கம்

*உரை என்பது உரைத்தல் அல்லது சொல்லுதல் என்ற பொருளுடையது. இலக்கியம், இலக்கணம், உரை என்ற மூன்றும் மொழிப்புலத்தை மையமாகக் கொண்ட மூன்று வகைமைப்பட்ட தளங்கள். இவை, தமக்குள் நெருக்கமான உறவுகள் கொண்டவை. இலக்கிய, இலக்கணங்களைச் செழுமைப்படுத்துவதற்கும் அவற்றின் வாசிப்புத் தளத்தைப் பொருளுடையதாகவும் விரிவுடையதாகவும் ஆக்குவதற்கு உரைகள் துணைபுரிவன. உரைகள் காலத்தின் தேவை. உரைகள் இல்லையெனில், பல தலைமுறைகளைத்தாண்டி வருகின்ற இலக்கிய, இலக்கணங்களைப் புரிந்துகொள்வதிலும் விளக்குவதிலும் தவறுகளும் தடைகளும் ஏற்படக்கூடும். முக்கியமாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டுத் தோன்றிய சங்க இலக்கியங்களையும் தொல்காப்பியத்தையும் இந்த உரையாசிரியர்கள்தான் நம்மோடு நெருங்கி இருக்கச் செய்திருக்கிறார்கள். இவ்வுரைகள், தமிழ் இலக்கிய வரலாற்றில் மிக முக்கியமான இடம் வகிக்கின்றன.*

*உரைகளின் இலக்கணம் தொல்காப்பியத்தி லேயே வரையறுக்கப்பட்டிருக்கின்றது. அதன் செய்யுளியலிலும் மற்றும் பொருளதிகாரத் தின் இறுதியாகவுள்ள மரபியலிலும் உரை பற்றிய விளக்கம் சொல்லப்படுகின்றது. உரை என்பதையும் ஒருவகைமையாகத் தொல்காப் பியம்*

சொல்லுகின்றது. இந்த செய்யுள் விளக்கங்கள், உரை என்ற சொல்லை இரண்டு தளங்களில் காட்டுகின்றன. முதலில் செய்யுளியலில் சொல்லப்படுகின்ற பாட்டு என்ற கட்டுக்கோப்பிலிருந்து பிறழ்ந்து அல்லது நெகிழ்ந்து வருகின்ற ஓர் அமைப் பாக உரை சொல்லப்படுகிறது.

**"பாட்டிடை வைத்த குறிப்பினானும்**
**பாவின்று எழுந்த கிளவியானும்**
**பொருளொடு புணராப் பொய்ம் மொழியானும்**
**பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்"[1]**

என்று வருவது உரை என்று சொல்லப் படுகிறது. இந்த விளக்கம் இன்று நாம் உரைநடை என்று சொல்கின்றோமே அதனோடு ஒத்தது.

தமிழில் உரைகள் தோன்றுவதற்குரிய தேவை களையும் சூழல்களையும் பல்வேறு காரணி களாக வகுக்கின்றார். குறிப்பாகத், தமிழ்ப் பண்பாட்டு மீட்டுருவாக்கத்தின் மன எழுச்சியும் அதனை முன்னிட்டுத் தொன்மை இலக்கியம், இலக்கணம் முதலியவற்றை அறிகின்ற அல்லது போற்றுகின்ற ஒரு எழுச்சியும் உரைகள் தோன்றக் காரணி என்பதாகப் பல்வேறு கருதுகோள்களை முன்வைக்கின்றார்.

### உரைகளின் பணி

உரைகளின் பணிகள் என்ன? தமிழ் இலக்கிய, இலக்கணங்களுக்கு அவை எவ்வாறு உதவி செய்திருக்கின்றன? என்ற வினாக்களை எழுப்பி அவற்றிற்கு விடை கூறும் முகமாக, "பல தலைமுறை வேறுபாடு களைத் தாண்டிப் பிற்காலத்தவர்கள் அவ்விலக்கியங்களை அவ்வவற்றின் தளங் களில் வைத்தும் உரிய கால, இடச் சூழ்நிலைகளைக் கொண்டும் அறிந்து கொள்வதற்கு உரைகள் உற்ற துணைகளாக இருக்கின்றன"[2] என எடுத்துரைக்கின்றார்.

இலக்கிய, இலக்கண நூல்களில் கடினமான சொற்களும் சொல் வழக்குகளும் மரபுகளும் இருத்தல் கூடும். இவை தடைக்கற்களாக இல்லாமல் மூல நூல்களை முறையாகப் புரிந்து கொள்வதற்கு உரைகள் உதவுகின்றன. முக்கியமாக, சொற்பொருள் விளக்கம் மூலமாக இது நிகழ்கிறது. சான்றாக, **புனற்பூசல்**[3] என்பதற்கு "நீர் விளையாட்டால் உண்டாகும் சண்டை" என்று உரையில் விளக்கம் சொல்லப்படுகிறது.

ஆழமான சில கருத்தியல்களும் வேரூன்றிக் கிடக்கின்ற அக்காலத்திய பழக்கவழக்கங்க ளும் பண்பாடுகளும் உரைகள் மூலமாகப் புலப்படுகின்றன. சான்றாக, களவியல் உரையாசிரியர் பெரும் நிலக்கிழார்களின் வீடுகளின் உட்பகுதிகளை அட்டகாரம், கோட்டகாரம், கூடகாரம், பள்ளியம்பலம் என்று வகையிட்டுக் கூறுவதைக் காணலாம். இளம்பூரணர், நச்சர் முதலிய பலருடைய உரைகளில் அவர்களது தத்துவக் கருத்து களும் பண்பாட்டு மரபுகளும் பேசப்பட்டி ருக்கின்றன என்பதை அறியலாம்.

காலப்போக்கில் காணாமல்போன இசை, நாடகம் போன்ற கலை வடிவங்கள் பற்றிய செய்திகளையும் அவை குறித்த பல நூல்களையும் (இசை நுணுக்கம், கூத்தநூல், மதிவாணன் நாடகம் போன்றன) பல பாடல்களையும் (பாண்டிக்கோவை) பல அரிய இலக்கியப் பனுவல்களையும் (தகடூர் யாத்திரை) பல இலக்கண நூல்களையும் (செயிற்றியம், காக்கைபாடினியம், சிறுகாக்கை பாடினியம்) உரைகள் வழியாக நாம் காண முடிகிறது.

### உரை வகைகள்

உரைகள் ஒரே தளத்தில் அல்லது ஒரே தளத்தின் பொருட்டு அமைவன அல்ல. அவற்றிற்குப் பல தளங்கள் உண்டு. உரை களை அவை இடம்பெறுகின்ற தளங்களை வைத்து, நான்காக வகைப்படுத்தலாம்.

**இலக்கணத்திற்கான உரைகள்**

**இலக்கியங்களுக்கான உரைகள்**

**சமய இலக்கியங்களுக்கான உரைகள்**

**மற்ற இலக்கியங்களுக்கான உரைகள்**

சமய இலக்கியங்களுக்கான உரைகளில் வைணவ உரைகள் குறிப்பிடத்தகுந்தவை. தமிழில் இலக்கண நூல்களுக்கு உரைகள் அதிகம். இலக்கண உரைகளை இரண்டு உட்பகுப்புகளாகப் பிரிக்கலாம். அவை, பொருள் இலக்கணத்திற்கான உரைகள், எழுத்து, சொல் உள்ளிட்ட மொழியமைப்பு குறித்த இலக்கணங்களுக்கான உரைகள்.

உரைகள் சுருக்கமாகவோ விளக்கமாகவோ அமைதலைப் பொறுத்து, அவற்றை அவ்வடிப் படையிலும் வகுத்துக் காணலாம். இவ்வாறு வகைப்படுத்துகிற முயற்சிகளை நன்னூல் காலத்தில் பார்க்கிறோம். தொல்காப்பியம் உரைகளை வகைப்படுத்தவில்லை. ஆனால், நன்னூல் வகைப்படுத்துகிறது. பொதுப் பாயிரத்தில் காண்டிகை உரை, விருத்தியுரை என இரண்டாகப் பாகுபாடு செய்கிறது. நூற்பாவின் பொருள் தோன்றுகிறவிதமாகக் கருத்து, பதப்பொருள், எடுத்துக்காட்டு மற்றும் வினா, விடை ஆகிய ஐந்து கூறுகள் அமைவது காண்டிகையுரை. மேலும், தொல்காப்பியம் மரபியலில் 'உரை' என்று சொல்லுகிற பொது வரையறையைச் சற்று விரிவுபடுத்தி நன்னூல் அதனை விருத்தியுரை என்கிறது. இதனை,

**"சூத்திரத் துட்பொரு ளன்றியு மாண்டைக்கு**
**இன்றி யமையா யாவையும் விளங்கத்**
**தன்னுரை யானும் பிறநூ லானும்**
**ஐய மகலஐங் காண்டிகை யுறுப்பொடு**

மெய்யினை எஞ்சாது இசைப்பது விருத்தி"[4] என்கிறது நன்னூல்.

### களவியலுரை

இன்று கிடைக்கின்ற உரைகளுள் காலத்தால் முதன்மையானது இறையனார் அகப்பொருள் உரை. சங்ககால வீழ்ச்சிக்குப் பிறகு, வீழ்ச்சி பெற்ற தமிழ் மொழி, பண்பாடு, இலக்கியம் ஆகியவற்றை மீட்டுருவாக்கம் செய்ய வேண்டும். அவற்றிற்குப் புத்தெழுச்சி தர வேண்டும் என்னும் நோக்கத்தில் பிறந்தது இது. தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பெரிதும் பின்பற்றி அறுபது நூற்பாக்களால் அமைந்தது களவியல் என்னும் இலக்கண நூல். இதனை இயற்றியவர் இறையனார் என்னும் புலவர். கி. பி. 9ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்பார்கள். களவியல் தோன்றியவுடனேயே அதற்கான உரையும் தோன்றிவிட்டது என்றும் உரை சொன்னவர் பெயர் நக்கீரன் என்றும் சொல்லப்படுகிறது. இவர் சங்ககாலத்திய நக்கீரர் அல்லர்.

மூலநூலைவிடவும் பன்மடங்கு விரிவானது களவியலுரை. இவ்வுரை, அதிகம் முக்கியத் துவம் வாய்ந்ததாகவும் தொடர்ந்து மேற் கோள் காட்டப்பட்டும் வருகிறது. இவ்வுரை யின் முக்கியமான பங்களிப்பு தமிழ்ச்சங்கம் என்பது பற்றிய ஒரு வரலாற்றுப் புனைவை முதல்முறையாக முன்வைத்துள்ளது. மூன்று சங்கங்கள், அவற்றிலே இருந்த கடவுளர்கள் மற்றும் அகத்தியர் உள்ளிட்ட முனிவர்கள். புலவர்கள் பற்றி நீண்டப் பட்டியலிடுகிறது. இவ்வுரை, தனக்கு முன்னால் இருந்த பல நூல்களைக் குறிப்பிடுகிறது. இலக்கிய வரலாற்றில் அவை பற்றிய பதிவு மிக அவசியமாகும். பாண்டிக்கோவை என்ற நூல் இவ்வுரை மூலமாகவே முதலில் வெளிப் படுகிறது. அதிலிருந்து 325 பாடல்களை இது மேற்கோள்காட்டுகிறது. இவ்வுரையின் சிறப்பு களில் ஒன்று, இதனுடைய அழகிய உரை நடைத்திறனாகும். பிற்கால உரைநடைக ளுக்கு இது ஒரு முன்மாதிரியாகத் திகழ்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது.

### இளம்பூரணர்

இளம்பூரணர் கி. பி. 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர். பின்னர் வந்த இலக்கண நூலா சிரியர்கள் பலராலும் இவர் 'உரையாசி ரியர்' என்றே அழைக்கப்படுகின்றார். தொல் காப்பியத்திற்கு உரை எழுதியவர்களுள் இவரே முதன்மையானவராகக் கருதப் படுகிறார். தொல்காப்பியம் முழுமைக்கும் இவரது உரையுண்டு. தொல்காப்பியப் பனுவலை அதிக மாற்றத்திற்கு இடம் தராமல் ஒரு நிரந்தரத் தன்மையோடு காப்பாற்றிய பெருமை இளம்பூரணருக்கு உண்டு.

இளப்பூரணருடைய உரையில் அறிவியல் சார்ந்த அறிவும் புலப்படுகிறது. சான்றாக, அகத்திணையியலில், நிலம் பற்றிக் குறிப்பிடுகையில், "நிலம் எனவே நிலத்திற்குக் காரணமாகிய நீரும் நீருக்குக் காரணமாகிய தீயும் தீக்குக் காரணமாகிய காற்றும் காற்றுக்குக் காரணமாகிய ஆகாயமும் பெறுதும்"[5] என்று அவர் கூறுவது உலகத்தோற்றம் பற்றிய இயற்பியல் சார்ந்த கருத்தாகும். பல சொற்களுக்கும் தொடர்களுக்கும் இளம்பூரணர் தருகின்ற விளக்கம் அவ்வக்காலத்தோடு ஒட்டியது மட்டுமல்லாமல் இன்றும் பொருத்த முடையதாக உள்ளது என்பதையெல்லாம் எடுத்துக்காட்டுகிறார்.

### யாப்பருங்கல விருத்தி

கி.பி. 10 அல்லது கி.பி. 11 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நூல் யாப்பருங்கலம். இதற்கு விருத்தியுரை என்ற வகைப்பட்ட ஓர் உரையும் தோன்றுகிறது. இவ்விரண்டையும் இயற்றியவர் அமுதசாகரனார் என்பது பலருடைய கருத்து. அவ்வாறில்லாமல், குணசாகரர் என்ற கருத்தும் உண்டு. அதனைத் தொடர்ந்து, யாப்பருங்கலத்துக்குச் சுருக்கமாக யாப்பருங்கலக் காரிகை வந்தது.

மூன்று இயல்களையும் 96 நூற்பாக்களையும் கொண்டது யாப்பருங்கலம். இதனுடைய விருத்தியுரையோ இதனைவிடவும் பற்பல மடங்கு விரிவானது. செய்யுள் யாப்பு பற்றி நேரடியாகவோ சுற்றிவளைத்தோ இதில் சொல்லாதன இல்லை என்று நினைக்கத் தூண்டுகிற விதத்தில் ஒரு களஞ்சியம் போல் விளங்குவதற்கு இவ்விருத்தியுரை முயலுகிறது. கிளைத்துக் கிளைத்துப் போகின்ற இவ்வுரை, சிலசமயம் எங்கே தொடங்குகிறது, எங்கே இட்டுப்போகிறது என்று கணிக்க முடியாத வாறு உள்ளது. இவ்விருத்தி உரையே பல இடங்களில் சங்க யாப்பு, அவிநயம் முதலிய நூல்களையும் நற்றத்தனார், பல்காயனார், சிறுகாக்கை பாடினியார், காக்கைபாடினி யார், மயேச்சுரர் முதலிய ஆசிரியர்களையும் மேற்கோள் காட்டியிருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

### பேராசிரியர்

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் இளம் பூரணரைத் தொடர்ந்து மிகச்சிறந்த உரையா சிரியர்களாகக் கருதப்படுபவர்கள் பேராசிரி யரும் சேனாவரையரும் ஆவர். சேனாவரை யர் சொல்லதிகாரத்திற்கு மட்டும் உரை கண்டவர். பேராசிரியர் பொருளதிகாரத் திற்கு மட்டும் உரை எழுதியவர். பொருளதிகாரத்திற்கு முழுதும் இவர் உரை எழுதியிருக்கலாம் என்றாலும் மெய்ப்பாட்டி யல், உவமவியல், செய்யுளியல், மரபியல் ஆகிய நான்கு இயல்களுக்கு மட்டுமே இவருடைய உரைகள் கிடைக்கின்றன. இருப்பினும் பொருளதிகாரத்திற்குப் பேராசிரியர் உரையே மிகச்சிறப்பானது எனப் பாராட்டப்படுகிறது.

தொல்காப்பியத்தை மிகவும் போற்றும்

பேராசிரியர், தமிழ்க் கவிதையியல் மரபுக்கும் தமது காலத்து நிலைமைக்கும் ஒவ்வாத பிறருடைய கருத்துகளை மறுக்கிறார். சான்றாக, உவமம் என்பது செய்யுள் மொழியின் ஒரு பண்பு. உவமம் என்பது தனியே ஒரு இயலில் பேசப்படுகின்ற அளவுக்குச் சிறப்புடையது. தொல்காப்பியம் உவமத்தை அவ்வாறுதான் கையாளுகிறது. ஆனால், தண்டியும் பிற வடமொழியாளர்களும் கூறுவதுபோல், உவமம் ஓர் அணியல்ல. உவமவியலுக்கு விளக்கம் சொல்லுகிறபொழுது பிற்காலத்தாரால் உவமம் ஓர் அணியாகக் கூறப்படுவதை மறுக்கிறார். அதற்குரிய காரணங்களையும் வரிசைப்படுத்தி விளக்குகிறார்.

### சேனாவரையர்

தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்திற்கு மட்டுமே உரை கண்டவர் சேனாவரையர். சொல்லுக்குச் 'சேனாவரையம்' என்ற ஒரு வழக்கு உண்டு. சொற்களின் பயன்பாட்டு நிலையோடும் மற்றும் அச்சொற்களை வரலாற்று நிலையோடும் விளக்குவதில் அவர் கவனம் காட்டுகிறார். தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றை எழுத சேனாவரையர் உரை மிகுந்த பயன் தரும்.

சங்கஇலக்கியத்தில் நல்ல பயிற்சி உடையவர் சேனாவரையர். உரியியலில் தொல்காப்பியர் கூறும் எல்லா உரிச்சொற்களுக்கும் சங்கப் பாடல்களிலிருந்தே தகுந்த சான்றுகளைத் தருகிறார். சான்றாக, 'ஐ' என்னும் உரிச்சொல் வியப்பு என்னும் பொருள் கொண்டது. இதற்கு. **"ஐதே காமம் யானே"**[6] என நற்றிணையை உதாரணம் காட்டுவார்.

### நன்னூல் உரைகள்

இலக்கணங்களுள் தொல்காப்பியத்திற்குப் பின்னர் சிறப்புப் பெற்றதும் புகழ் பெற்றதுமான இலக்கணம் பவனந்தியின் நன்னூல். இந்நூல் 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றியது. எழுத்து, சொல் என இரண்டு பகுதிகளை மட்டும் கொண்டது. நன்னூலுக்குக் குறுகிய கால இடைவெளியிலேயே உரைகள் தோன்றிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூலின் முதல் உரையாசிரியர் மயிலைநாதர். 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். அவருக்குப் பிறகு 17ஆம் நூற்றாண்டில் சங்கரநமச்சிவாயர் நன்னூலுக்கு விருத்தியுரை எழுதியுள்ளார். இன்னும் சற்று விளக்கமாகச் சிவஞான முனிவர் இன்னொரு விருத்தியுரை எழுதியுள்ளார். இது புதிய விளக்கங்களுடன் பலராலும் பாராட்டப்படுவதாக உள்ளது.

இவர்களுக்குப் பின்னர் நன்னூலுக்கு உரை எழுதியவர்கள் ஆண்டிப்புலவர், கூழங்கைத் தம்பிரான், இராமானுசக் கவிராயர், விசாகப் பெருமாள் ஐயர், ஆறுமுக நாவலர், சு. குமாரசாமிப் புலவர், பவானந்தம் பிள்ளை, முத்துத்தம்பிப்பிள்ளை என்று பலர் உண்டு. இவர்களில் ஆறுமுக நாவலர் எழுதிய உரை காண்டிகை உரை ஆகும்.

### சிலம்பின் உரைகள்

தமிழ்க் காப்பியங்களுள் சிறந்த உரைகள் பெற்ற நூல் சிலப்பதிகாரமே ஆகும். இதற்குக் கிடைத்த இரண்டு உரைகளுமே மிகச்சிறந்த உரைகளாகும். முதலில் எழுந்த அரும்பத உரை அல்லது பழைய உரை நூல் முழுமைக்குமாக அமைந்துள்ளது. அதனைப் பின்பற்றி எழுந்ததுதான் அடியார்க்கு நல்லார் உரை. புகார், மதுரைக் காண்டங்களுக்கு மட்டுமே இவரது உரை கிடைக்கிறது. அதிலும் சில காதைகளுக்கு இவரது உரையில்லை.

இசையையும் நாடகத்தையும் அரங்க அமைப்பையும் பற்றி விளக்கமாகப் பேசும் அரங்கேற்றுக்காதைக்கு அரும்பத உரையாசிரியர் தருகிற விளக்கம் சீரும் சிறப்பும் உடையது. தமிழில் இசைக்கலை பற்றிய வரலாற்றையும் கோட்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு இவருடைய உரை பெரிதும் பயனாகிறது. அடியார்க்கு நல்லார் இவ்விடங்களில் இவரை, அப்படியே பின்பற்றி எழுதுகிறார்.

அடியார்க்கு நல்லார் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் பற்றிய கருத்தோட்டத்தை நன்கு உணர்ந்தவர். பல இடங்களில் இதனை வலியுறுத்திச் செல்லுகிறார். ஆய்ச்சியர் குரவையில் பாலைப்பண் பற்றி விரிவாக விளக்குகின்றார். அதன் வகை, தொகைகளையும் பாடப்படுகின்ற முறைமையையும் விளக்குகின்றார். எல்லா காதைகளுக்கும் உள்ள பன்முகப்பட்ட யாப்பு வடிவங்களையும் அறுதியிட்டுக் குறிப்புகளைப் பொருத்தமுறக் கூறுவார். இந்த இரு உரைகளின் விளக்கங்களைப் பின்பற்றி 20ஆம் நூற்றாண்டில் சிலப்பதிகாரத்திற்கு விளக்கவுரை எழுதியவர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் ஆவார் என்பதாகப் பல்வேறு செய்திகளை எடுத்துக்காட்டியுள்ளார்.

### திருக்குறளின் உரைகள்

திருக்குறளுக்கு இடைக்காலப் பகுதியில் பத்துக்கும் மேற்பட்ட உரைகள் தோன்றியுள்ளன என்று கூறப்படுகின்றது. இது பற்றிய ஒரு தனிப்பாடல், பதின்மரைப் பட்டியலிடுகிறது.

**"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
**பரிதி பரிமேலழகர் - திருமலையர்**
**மல்லர் பெரிப்பெருமாள் காலிங்கர்**
**வள்ளுவர்நூற்கு**
**எல்லை யுரை செய்தார் இவர்"**

ஆனால், இந்தப் பத்துப்பேரில் பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதி, காலிங்கர் ஆகிய ஐவருடைய உரைகளே கிடைக்கின்றன. அதிகாரங்களைப் பகுப்பதிலும் அவற்றிற்குப் பெயரிடுவதிலும் இந்த

ஐவருடைய உரைகளிலும் வேறுபாடுகள் உண்டு. இவ்வுரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்ததும் செல்வாக்கு உடையதும் ஆகும். அடுத்து, மணக்குடவர் உரையும் குறிப்பிடத்தக்கச் சிறப்புகள் கொண்டது.

பிற்காலத்தில் வீரமாமுனிவர் அதன்பின் ஈக்காடு சபாபதி முதலிய சிலர் திருக்குறளின் சில பகுதிகளுக்கு உரைகாண முயன்றுள்ளனர். திரு. வி. க. முதல் நூறு குறள்களுக்கு விருத்தியுரையாக விளக்கி உரை செய்துள்ளார். அதன்பின்னர் கோ. வடிவேலு செட்டியார், பரிமேலழகர் உரையோடு அந்த உரைக்கு விளக்கமாகத் தன்னுடைய விளக்கத்தைக் கூறியும் பிற உரைகளை எடுத்துக்காட்டியும் விளக்கம் தந்திருக்கிறார். தொடர்ந்து, அருணாசலக் கவிராயர், சுப்பிரமணி சாஸ்திரி, கா.சு. பிளை, நாமக்கல் கவிஞர், வ.உ.சி, பாரதி தாசன், புலவர் குழந்தை முதலியோர் தத்தமக்குரிய பாணியில் குறிப்பிடத்தகுந்த சிறப்புடன் உரைகள் எழுதியுள்ளனர். மு. வரதராசன், வ.சுப.மாணிக்கம், பால்வண ்ணன், புலியூர்க்கேசிகன் முதலிய பலர் தொடர்ந்து சுருக்கமாகவும் எளிமை யாகவும் பொழிப்புரைகள் எழுதியுள்ளனர். இலக்கிய நூல்களில் திருக்குறளுக்கே உரைகள் அதிகம் எனப் பல செய்திகளை முன்வைத்துள்ளார்.

### நச்சினார்க்கினியர்

தமிழ் உரையாசிரியர்களுள் அதிக நூல் களுக்கு உரையெழுதிய பெருமை இவரைச் சாரும். இலக்கணத்துள் தொல்காப்பியம் முழுமைக்கும் இவருடைய உரை உண்டு. சங்க இலக்கியத்துள் பத்துப்பாட்டு முழுமை க்கும் உரை எழுதியவர். எட்டுத்தொகையில் கலித்தொகைக்கு உரை எழுதியுள்ளார். காப்பியங்களுள் சீவகசிந்தாமணி முழுமைக் கும் இவரது உரையுண்டு. குறுந்தொகைப் பாடல்கள் இருபதுக்கு இவர் எழுதியதாகக் கூறப்படும் உரை கிடைக்கவில்லை.

நச்சினார்க்கினியரின் தனிச்சிறப்பு அவரது பரந்துபட்ட ஆழமான அறிவாகும். உரை கூறும் அவ்வவ் இலக்கணங்களுக்கும் இலக்கியங்களுக்கும் தகுந்தவாறு அவருடைய புலமையை அவர் உணர்த்துகின்றார். சொற்களுக்கும் நீண்ட தொடர்களுக்கும் விளக்கங்கள் சொல்லிவிட்டு, சில அடிகள் முடிந்தவுடன் ஒரு பகுதி முடிந்தது என்ற கருத்துடன் அவற்றைத் தொகுத்துக் கூறுவார். இது அவருடைய தனிச்சிறப்பா கும். இலக்கண உரைகளின்போது தொடர்பு டைய இலக்கிய அடிகளை மேற்கோள் காட்டுவதும் இலக்கிய உரைகளின்போது இலக்கண வழக்குகளை நினைவுபடுத்தி விளக்குவதும் நச்சினார்க்கினியரின் இயல்பு என்பதாகப் பலதரப்பட்ட தரவுகளைப் புலப்படுத்தியுள்ளார்.

### சமய இலக்கிய உரைகள்

தமிழில் சமயச் சார்பான இலக்கிய நூல்களுக்கு எழுந்த உரைகள் அதிகமில்லை. ஆனால், திருக்கோவையாருக்கு விளக்கமாகப் பேராசிரியரின் பழைய உரை ஒன்று உண்டு. தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய பேராசிரியருக்கும் இவருக்கும் தொடர்பு இல்லை. இவ்வுரையின் சிறப்பு அகமும் பக்திமார்க்கமும் ஒன்றிணைந்து தோன்றுகின்ற திருக்கோவையார்ப் பாடல்களை அநத வகையான கருத்தியல் நிலை சிதையாமல் விளக்கம் தருவதாகும். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில்தான் பெரியபுராணம் முதலிய சமய இலக்கியங்களுக்கு உரைகள் கூறும் முயற்சிகள் தோன்றத் தொடங்குகின்றன. அதுவும் பொழிப்புரை போன்று பெரிய புராண வசனம், திருவிளையாடற்புராண வசனம் என்ற முறையில் சில நூல்கள் தோன்றின. ஆனால், உண்மையில் இவை உரைகள் அல்ல.

பெரியபுராணத்திற்கு முதன்முதலில் விளக்க வுரை எழுதியவர் சி.கே.சுப்பரமணிய முதலியார் ஆவார். சைவசமய மரபோடு கூடிய விளக்கங்களும் சிவனடியார்களை வரலாற்று உணர்வோடு சொல்லுகிற திறனும் கொண்ட இவ்வுரை சிறந்த உரையாகப் போற்றப்படுகிறது. மாணிக்கவாச கரின் திருவாசகத்திற்கு முதன்முதலாக உரை எழுதியவர் கா. சுப்பரமணியப் பிள்ளை ஆவார். ஆனால், பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் திருவாசகத்தின் முற்பகுதிக்கு எழுதிய உரையே சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

பதினோராந்திருமுறைக்கு ஆ.சிங்காரவேலு முதலியாரும் (1930), பட்டினத்தார் பாடல்களுக்குத் திரு.வி.க.வும் (1950), திருவிளையாடற்புராணத்திற்கு ந.மு.வேங்கட சாமி நாட்டாரும் (1940), உரையெழுதியு ள்ளனர். ஆனால், இவை பெரிதும் பொழிப்புரை போன்றே அமைந்துள்ளன. வைணவ இலக்கியங்களுள் நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு ஈட்டுரைகள் செய்யப் பட்டுள்ளன.

### ஈட்டு உரைகள்

வைணவ இலக்கியங்களில் பொய்கையாழ் வார், நம்மாழ்வார், ஆண்டாள், திருமங்கை யாழ்வார் முதலிய பன்னிரு ஆழ்வார்கள் பாடியவை நாலாயிரத் திவ்வியப்பிரபந்த ங்கள் ஆகும். பதினோராம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த இராமானுசர் காலம் வரை வாய்மொழி மரபாக இருந்த உரைகள் பின்னர் வைணவ வியாக்கியான ங்கள் என்ற பெயரில் முறையாக எழுதப் பட்டன. நம்பிள்ளை எழுதிய திருவாய் மொழி உரை ஆறாயிரப்படி என்னும் அளவையோடு கூடியது. அதன்பின்னர், இதனை விரிவாக்கி நஞ்சியர் என்பார் ஒன்பதனாயிரம் படி என்னும் அளவினதாக

உரை இயற்றினார். அதன்பின் பெரிய வாச்சான் பிள்ளை அதனையும் விரிவாக்கி 24000 படி எழுதினார். வடக்குத் திருவீதிப் பிள்ளை அதனை மேலும் விரிவுபடுத்தி 36000 படியாக விரித்தார். இவ்வுரையின் சிறப்பு கருதி இதனையே ஈட்டுரை என்று வழங்குபவர்களும் உண்டு. அதன்பின்னர் 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் வந்த மணவாளமாமுனிகள் நீண்டு போய்க் கொண்டிருக்கும் இதனைச் சுருக்கமாகச் செய்யக் கருதி 12000 படி செய்தார்.

நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கன்றி வேறு எந்த இலக்கியத்திற்கும் இத்தகைய உரைக் களஞ்சியம் இல்லை. படி என்பது எழுத்து களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட ஓரளபு. ஒரு படி என்பது மெய்யெழுத்துகள் நீங்கலாக உயிர் எழுத்து களும் உயிர்மெய் எழுத்துகளுமாக 32 எழுத்து களைக் கொண்டது. உரைகள் இந்த அளவையைக் கொண்டு மதிப்பிடப்படுகின் றன. இவ்வாறு எழுதப்பட்ட வியாக்கியானங் கள் ஈட்டுரைகள் என அழைக்கப்படுகின்றன.

### கம்பனுக்கு

வைணவ இலக்கியங்களுள்ளும் தமிழ்க் காப்பியங்களுக்குள்ளும் கம்பனுடைய இராமகாதைக்குத் தனிச்சிறப்புண்டு. கி. பி. 19 ஆம் நூற்றாண்டில்தான் பி.கோவிந்தப் பிள்ளை, சு.இராமசாமி நாயுடு, சுப்பராயச் செட்டியார், திருமயிலை சண்முகம் பிள்ளை, மு. ரா. கந்தசாமிக் கவிராயர் முதலிய சிலர் கம்பராமாயணத்தின் சில பகுதிகளுக்கு உரை விளக்கங்கள் எழுதியுள்ளனர். வெ. ப. சுப்பிரமணிய முதலியார், டி.கே.சிதம்பரநாத முதலியார் கம்பன் காவியத்திலிருந்து தத்தமக்குப் பிடித்த பாடல்களைக் காப்பியப் போக்கு சிதறாமல் உரையும் சிறிய விளக்கங்களும் தந்துள்ளனர். கவிராசப் பண்டிதர், ஜெகவீரபாண்டியனார் கம்பனு டைய பெரும்பாலான பாடல்களுக்கு விளக்கமாய் கம்பன் கலைநிலை என்ற பாடல் தொகுப்பு இயற்றினார். 15 தொகுதி களுடன் கூடிய இதனை, மதுரை திருவள்ளுவர் நிலையம் வெளியிட்டது.

கம்பனுக்கு முழுமையாகவும் சிறப்பான முறையிலும் உரை எழுதியவர் (1940—50) வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் ஆவார். இவரது உரையில் இலக்கிய நயம், இலக்கணக்குறிப்பு, ஒத்த மேற்கோள்கள், உவமை உள்ளிட்ட அணிநயங்கள், புராணக் கதைகள், தத்துவப்போக்குகள் என்று பலவகைப்பட்ட விளக்கங்களும் உண்டு. இந்த உரை தமிழ் உரைகளின் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும் என்பதான செய்திகளை விளக்கியுள்ளார்.

### சைவத் தத்துவத்திற்கு

சமயத் தத்துவ நூல்களுக்கு அமைந்த உரைகளும் குறிப்பிடத்தக்கவை. உய்யவந்தா ரின் திருவுந்தியார் முதல் உமாபதி சிவாச்சாரியாரின் சங்கற்பநிராகரணம் வரையுள்ள 14 நூல்களைச் சைவ சித்தாந்த நூல்கள் என்பர். இவை, கி. பி. 12 முதல் 14 ஆம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியில் எழுதப்பட்டவை.

சிவஞான போதத்திற்கு 18ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவஞான முனிவர் சிற்றுரை ஒன்றும் ‘மாபாடியம்’ என்ற பெயரில் பேருரை ஒன்றும் எழுதினார். இவர் நன்னூலுக்கும் விருத்தியுரை ஒன்று எழுதியுள்ளார். இவர் சில கண்டன நூல் களையும் எழுதியுள்ளார். இவரது உரை சித்தாந்த விளக்கத்தில் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது என்பதான செய்திகளை விளக்குகின்றார்.

### 20இல் உரைகள்

20ஆம் நூற்றாண்டில் ஆறுமுக நாவலரும் சரவணப் பெருமாள் ஐயர் என்பவரும் இராமானுசக் கவிராயர் என்பவரும் குறிப்பிடத்தக்க உரையாசிரியர்கள். இந்த நூற்றாண்டில் அதற்குச்சற்று முந்தைய காலப் பகுதியை ஒப்பிடுகிறபொழுது உரைகள் அதிகம் ஆகும். அரசஞ்சண்முகனார் ‘சண்முக விருத்தி’ என்ற பெயரில் தொல் காப்பியம் பாயிரத்திற்கு மட்டும் விருத்தியுரை ஒன்று எழுதியுள்ளார். இது அவருடைய ஆழமான இலக்கணப் புலமையைக் காட்டக்கூடியது.

இலக்கண நூல்களைவிட இலக்கியங்களுக்கு இக்காலப் பகுதியில் சில நல்ல உரைநூல்கள் வெளிவந்தன. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் நற்றிணை முழுமைக்கும் உரை எழுதியுள்ளார். சௌரிப்பெருமாள் அரங்கன் குறுந்தொகைக்கு உரை எழுதியுள்ளார். 20 ஆம் நூற்றாண்டில் சங்கப் பாடல்களுக்கு எழுதப்பட்ட இரண்டு சிறந்த உரைகள் மறைமலையடிகளின் முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரையும் பட்டினப்பாலை ஆராய்ச்சி உரையும் ஆகும். அடுத்து, வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் கம்ப ராமாயணம் மட்டுமின்றி பத்துப்பாட்டிற்கும் சிலப்பதிகாரத்தில் சில பகுதிகளுக்கும் சடகோபர் அந்தாதி, திருப்பாவை, அழகர் கலம்பகம், மதுரைக் கலம்பகம், அஷ்டப் பிரபந்தம் முதலிய இலக்கிய நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார்.

முத்தொள்ளாயிரத்திற்கு ந. சேதுரகுநாதன் உரையெழுதியுள்ளார். பாடநூல்கள் என்ற அடிப்படையிலும் பொதுமக்களின் தேவை என்ற அடிப்படையிலும் புலியூர்க்கேசிகன் சங்க இலக்கியங்களுக்கு எளிமையான பொழிப்புரைகள் எழுதியுள்ளார். இவருடைய உரைகள் 1960-1980 காலப்பகுதியில் மிகவும் செல்வாக்குப் பெற்றிருந்தன. தொடர்ந்து நந்திக்கலம்பகம், கலிங்கத்துபரணி, மீனாட்சி யம்மைப் பிள்ளைத்தமிழ், குற்றாலக்குறவஞ்சி முதலிய இடைக்கால, பிற்கால இலக்கியங்

களுக்கு மாணவர்களுக்கு உதவும்படியான பல உரைகள் வந்துள்ளன என்பது வரை பல அரிய தகவல்களைப் பதிவு செய்துள்ளார்.

## உரைகளும் திறனாய்வும்

ஆசிரியர்களுக்கும் அவர்களை வாசிப்போருக்கும் நடுவே உள்ள இடைவெளிகளை, இட்டு நிரப்ப முயல்வதும் அவ்விரு தரப்பினரையும் தம்முள் நெருங்கியிருக்கச் செய்வதும் உரைகளின் பணியெனின், திறனாய்வின் நோக்கமும் இதுதான். இன்றைய திறனாய்வு செய்கிற வேலையை அன்றைய காலத்தின் தேவைக்கேற்ப உரைகள் செய்தன.

படைப்பிலக்கியப் பனுவலை இன்னது, இத்தகையது என்று விளக்குவதும் அதனுடைய நயம் அல்லது சிறப்பு பற்றிச் சொல்வதும் அப்பனுவலின் வெவ்வேறு பொருட்களை உணர்த்துவதும் திறனாய்வின் பண்பு. தமிழ் இலக்கணங்கள் வரையறை தருகின்ற உரையின் இயல்பும் இதுவே ஆகும். இவ்வாறு உரைகள் இலக்கியத் திறனாய்வின் பண்புகளையும் நோக்கங்களையும் கொண்டிருக்கின்றன என்ற பல்வேறு உரை குறித்த திறனாய்வுச் செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார்.

## உரையும் உரைநடையும்

நடை என்ற ஒரு சொல்லைப் பின்னொட்டாகப் பெற்று உரைநடை என்று தனியே ஒரு சொல் வழக்கு அமைந்தது. இன்று, அது தனிநிலை பெற்ற ஒரு இலக்கிய வகைமையாகும். உரைக்கின்ற வழக்கிலிருந்து வேறுபட்டு அதிலிருந்து வித்தியாசமான நோக்கத்தோடும் செயல்பாட்டோடும் தனி வீச்சுகளோடும் உருவாகி இருக்கிறது; வளர்ந்திருக்கிறது.

உரை என்பதும் உரைநடை என்பதும் அவற்றின் நோக்கத்தையும் அவை இடம்பெறும் சூழ் அமைவினையும் தேவையையும் கருதி கைதேர்ந்த உத்திகளையும் நடையியல் கூறுகளையும் கொண்டனவே அன்றி, அவை முரண்பட்டன அல்லது முற்றிலும் வேறுபட்டன என்று கொள்ள முடியாது. உரை, உரைநடை என்ற சொல் வழக்குகளைத் தவிரவும் கட்டுரை என்ற சொல் வழக்கும் உண்டு. அது சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் காணப்படுகிறது. இந்த மூன்று சொல் வழக்குகளும் தம்முள் நெருக்கமான உறவு கொண்டவை. உரை முதன்மையானது; முதலில் வந்தது. அதனைத் தொடர்ந்து வந்தது உரைநடை, கட்டுரை ஆகியன. உரையின் வளர்ச்சியிலிருந்து தேவையும் சூழ்நிலையையும் கருதி தனித்தன்மைகளைக் கொண்டு வளர்ந்த செய்திகளை விவரித்துள்ளார்.

## முடிவுரை

உரைகளுக்கு வகைமைகள் கூறுவதற்குப் பின்னால் வந்தவர்கள் முயன்றிருப்பினும் அவற்றால் பெரிதாகப் பயன் எதுவுமில்லை. நன்னூல், யாப்பருங்கலம் ஆகிய இலக்கணங்களுக்கே காண்டிகை உரை, விருத்தி உரை என்ற இருநிலைப்பட்ட உரைகள் காணப்படுகின்றன. தொல்காப்பியத்திற்கு எழுந்த உரைகள் அவ்வாறு அறியப்படவில்லை. அவை விளக்கமாக இருந்தும்கூட 'விருத்தி' என்ற பகுப்பு காணப்படவில்லை. பாயிரத்தினை மட்டும் விரிவாக விளக்கும் உரை விருத்தி என்னும் பெயரோடு உள்ளன.

காண்டிகை உரை போன்ற சுருக்கமானக் குறிப்புரைகள் தொல்காப்பியத்திற்கு இல்லை. இலக்கிய உரைகளில் காண்டிகை, விருத்தி போன்ற வகைகள் கிடையாது. பூவை. கலியாண சுந்தரனார், தாயுமானவர் பாடல்களுக்கு விருத்தியுரை என்ற பெயரில் ஒரு விளக்கவுரை எழுதியுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

பத்தாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில் தமிழ் இலக்கணத்திற்கே அதிக உரைகள் தோன்றியுள்ளன. அதேசமயம், பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு வந்த உரைகள் பல வடமொழிச் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

இலக்கியங்களில் திருக்குறளுக்கே உரைகள் அதிகம். இடைக்காலத்தில் மட்டுமல்லாமல் நவீன காலத்திலும் அதிகமான இடத்தைப் பெற்றுள்ளது.

## சான்றெண் விளக்கம்

1. தொல். செய். நூ. எ. 171
2. நடராசன், தி. சு, உரைகளும் உரையாசிரியர்களும், ப. 6
3. புறம். பா. எ. 42
4. நன்னூல், நூ. எ. 23
5. தொல். அகத். நூ. எ. 4
6. நற்றிணை, பா. எ. 143

## துணைநூற்பட்டியல்

1. நடராசன், தி. சு, உரைகளும் உரையாசிரியர்களும், நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை, 2013.
2. பாலசுப்பிரமணியன், கு. வெ, தொல்காப்பியம் மூலமும் உரையும், நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை, 2019.
3. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை, சங்க இலக்கியம், கழக வெளியீடு, சென்னை, 2007.